சக்தி பௌண்டேஷன்- சக்தி மருத்துவப் பகுதி

## ஆண்களுக்குப் பொதுவாக ஏற்படும் ப்ராஸ்டேட், ஹைட்ரோசில் மற்றும் ஆர்ச்சிட்டிஸ் ப்ரச்சனைக்கள்

*" நோயின் குணத்தை முதலில் அறிதலும், அதற்குரிய மூல காரணத்தைத் தெரிதலும், அதைக் கருத்தில் கொண்டு சிகிச்சை தருதலுமே நோயை முற்றிலும் குணப்படுத்தும் வழியாகும்"*
** திருக்குறள்*

---

முக்கியக் குறிப்பு:பஞ்சபூத சிகிச்சை முறையைப் பின்பற்றும் உங்களுக்கு எவ்விதத்திலும் தனிப்பட்ட முறையில் மருத்துவ ஆலோசனை தேவைப் பட்டால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.தரப்பட்ட ஆலோசனைகளை நாற்பத்தியோரு நாட்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.அப்போதே முழுமையான பலன் கிட்டும்.

தண்ணீர் சிகிச்சை, மண் தத்துவ சிகிச்சை [ உணவு முறைகள், சட்டினி வகைகள், ஜூஸ் வகைகள் அடக்கம்], வாயு, அக்னி மற்றும் ஆகாச தத்துவ சிகிச்சைகளை " இர்ரெகுலர் மென்ஸ்ட்டுரேஷன்" என்ற ஆங்கிலத் தலைப்புக்குள் சென்று அதன் தமிழாக்கத்தைப் படித்து அறிக.

இனி மூன்று ப்ரச்சனைகளுக்கும் பொதுவாக பஞ்தபூத மருத்துவம் கூறும் சில சிகிச்சைகளைக் காண்போம்:

*** லிச்சிப் பழம்:**
தினமும் மூன்று அல்லது நான்கு லிச்சிப் பழங்களை உண்க.சிவப்பு வண்ணப் பழங்கள் மிகவும் சுவையுடன் இருக்கும்.எல்லா பழக்கடைகளிலும் குறிப்பாக சைனீஸ் பழக் கடைகளில் இக்கால பழமுதிர்ச்சோலைகளில் புதிதாகவே வருகிறது.ஒரு போதும் பதப்படுத்தப்பட்ட பழங்களையோ அதன் ஜூஸையோ வாங்கி சிகிச்சைக்குப் பயன்படுத்தாதீர்கள்! [ இப்பழமும் பார்க்க ஆண்குறியைப் போலத் தான் இருக்கும் ]

*** அன்னாசிப்பழமும் மஞ்சளும்:**
தினமும் ஒரு வேளை அன்னாசிப்பழச்சாறோ அல்லது சில துண்டுகளோ எடுத்துக் கொள்க.அவ்வாறு செய்யும் முன் ஒரு டீஸ்பூன் நல்ல மஞ்சளை வாயில் போட்டுக் கொண்டு விழுங்கி விடுக.இதனால் விரைப்பை வீக்கம் விரைவில் குணமாகும்.

*** த்ரிஃபலாதி சூர்ணம்:[** அனைத்து ஆயுர்வேத மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்]
தினமும் படுக்கப் போகும் ஒரு டீஸ்பூன் இப்பொடியை சுடுதண்ணீரில் கலக்கிக் குடித்துவர நல்ல பலன் கிடைக்கும்.

*** ப்ராஸ்டேட் ப்ரச்சனைக்கு:**
தினமும் கரிசலாங்கண்ணியை விழுதாக அரைத்து மதிய உணவுக்கு முன் கோலிகுண்டு அளவு விழுங்கி வரவும்.பச்சையாகக் கிடைக்கவில்லை என்றால் காய்ந்த இலைகளைத் தண்ணீரில் இட்டு டிகஷனாகக் காய்ச்சவும்.அதைக் குடித்தும் வரலாம்.

*** மற்றொரு ஹைட்ரோசில் மருந்து:**
எலுமிச்சை அல்லது சாத்துக்குடியின் தோலை அப்படியே மென்று விழுங்கலாம்.அல்லது தேங்காய், மிளகு, உப்பு கூட்டி அரைத்தும் சட்டினியாக நாற்பத்தியோரு நாட்கள் சாப்பிட்டு வர நல்ல குணம் உண்டாகும்.

*** ஹைட்ரோசில்லுக்குக் கற்றாழையின் மருத்துவம்:**
தினமும் சிறிய துண்டு கற்றாழையைத் தோல் சீவி, ஊனைக் கழுவி அப்படியே விழுங்கி வர நல்ல பலன் கிட்டும்.

மனதார நம்பிக்கையுடன் இவற்றைப் பின்பற்றிப் பலன் பெற வாழ்த்துக்கள்!

நன்றி!